இளையராஜாவின் அரை நூற்றாண்டு இசைப் பயணம்: அரசு சார்பில் கொண்டாட ஸ்டாலின் முடிவு

சென்னை, மார்ச்.14

இசையமைப்பாளர் இளையராஜாவின் அரை நூற்றாண்டுகாலத் திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இசை உலகில் ஏராளமான சாதனை படைத்த இளையராஜா, லண்டனில் தனது கனவு படைப்பான சிம்பொனியை கடந்த 8ந்தேதி நள்ளிரவு அரங்கேற்றி உலக சாதனை படைத்தார். லண்டன் செல்லும் முன்பாக இளையராஜாவை, அவரது இல்லத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து வாழ்த்து தெரிவித்திருந்தார்.

சிம்பொனி இசைத்து முடித்து, கடந்த 10ந்தேதி இளையராஜா லண்டனில் இருந்து சென்னை திரும்பினார். அப்போது இளையராஜா நிருபர்களுக்கு பேட்டியளிக்கும்போது, ''எனக்கு அரசு மரியாதையுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை கொடுத்திருப்பது நெஞ்சத்தை நிறைய வைத்துள்ளது. முதலமைச்சர் எனக்காக ஒரு விழா எடுத்தால், அங்கு விரிவாக பேசுகிறேன்'', என்றும் குறிப்பிட்டு சென்றார். இதற்கிடையே சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இல்லத்துக்கு இளையராஜா நேற்று நேரில் சென்றார். அப்போது முதலமைச்சர், இளையராஜாவுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதற்கிடையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

லண்டன் மாநகரில் சிம்பொனி சாதனை படைத்து திரும்பியுள்ள இசைஞானி இளையராஜா, அவரது பயணத்துக்கு வாழ்த்திய என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார். அவரது அரை நூற்றாண்டு கால திரையிசை பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். ராஜாவின் இசை ராஜ்ஜியத்தில் வாழும் ரசிகர்களின் பங்கேற்போடு இந்த விழா சிறக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை ஆழ்வார்ப்பேட்டை இல்லத்தில் இசையமைப்பாளர் இளையராஜா நேற்று சந்தித்து, லண்டனில் சிம்பொனி இசை நிகழ்ச்சியை முடித்துவிட்டு திரும்பிய தனக்கு தமிழ்நாடு அரசு சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்ததற்காக நன்றி தெரிவித்தார்.

அப்போது, சிம்பொனி இசை நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி மாபெரும் சாதனை படைத்ததற்காக இளையராஜாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டினார்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு 19 புதிய மாவட்ட செயலாளர்களை நியமித்தார் விஜய்

தனது கார் டிரைவர் மகனுக்கும் பதவி

சென்னை, மார்ச்.14

தமிழக வெற்றிக்கழகத்திற்கு மேலும் 19 புதிய மாவட்ட செயலாளர்களை விஜய் அறிவித்துள்ளார். தனது கார் டிரைவர் மகனுக்கு சென்னை தெற்கு (மேற்கு) மாவட்ட செயலாளராக பதவி வழங்கினார்.

தமிழக வெற்றிக்கழகத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்திற்கு கட்சியின் தலைவர் விஜய் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் முன்னிலை வகித்தார். த.வெ.க.வில் 120 மாவட்ட செயலாளர்கள் நியமிக்க திட்டமிடப்பட்டு 95 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே மீதம் இருக்கும் 25 மாவட்ட செயலாளர்களை தேர்ந்தெடுப்பதற்காக நிர்வாகிகளுடன் விஜய் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டார். இதில், கரூர், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், தூத்துக்குடி, திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்களை பிரிப்பதில் சிக்கலும், குழப்பமும் ஏற்பட்டது. மாவட்ட செயலாளர்களை நியமிப்பதில் இருந்து வந்த சிக்கல்களை விஜய் கவனமாக கேட்டுக்கொண்டார். அந்த பகுதிகளை சேர்ந்த நிர்வாகிகளிடமும் யாரை, மாவட்ட செயலாளர்களாக நியமித்தால் சரியாக இருக்கும் என்றும் விஜய் கருத்து கேட்டார். கட்சிக்காக உழைக்கும் தொண்டர்களுக்கு பதவிகளை வழங்கும் வகையில் 120 என்பதை 140 மாவட்ட செயலாளர்களை நியமிக்கலாமா? என்பது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதற்கிடையே, ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் 19 மாவட்ட செயலாளர்களை விஜய் அறிவித்தார். அவர்களுக்கு தன்னுடைய உருவம், கட்சி சின்னம் பொறித்த வெள்ளி நாணயங்களை விஜய் வழங்கினார். அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.

மக்கள் பணி செய்தவற்காக பதவி

பின்னர் பேசிய விஜய், 'மக்கள் பணி செய்வதற்காக தான் பதவிகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களுக்காக உங்களை அர்ப்பணித்து செயல்பட்டு கட்சிக்கு பெருமை தேடி தாருங்கள்' என்று கேட்டுக்கொண்டார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதியதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய நிர்வாகிகளுக்கு தொண்டர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன் என்று கூறியுள்ளார்.

மாவட்ட செயலாளர்கள் விவரம் வருமாறு (அடைப்புக்குறிக்குள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதி).

சென்னை தெற்கு (மேற்கு) மாவட்ட செயலாளர் – சபரிநாதன் (விருகம்பாக்கம்), சென்னை மத்தியம் (தெற்கு) – தீலிப்குமார் (சேப்பாக்கம் திருவல்லிக்கேணி), செங்கல்பட்டு மாவட்ட தலைவர் – குமார் (பல்லாவரம்), செங்கல்பட்டு வட மேற்கு மாவட்ட தலைவர் – சரத்குமார் (தாம்பரம்), சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் – பல்லவி (திரு.வி.க.நகர்) , சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட செயலாளர் – வேலு (ஆர்.கே.நகர்), திருவள்ளூர் தென் மேற்கு மாவட்ட செயலாளர் – பிரபு (மாதவரம்), சென்னை வடக்கு (தெற்கு) மாவட்ட செயலாளர் – விஜய ராகவன் (ராயபுரம்).

ஒரே ஒரு பெண்

திருவள்ளூர் தென் கிழக்கு மாவட்ட செயலாளர் – ஆர்.கே.மணிகண்டன் (திருவொற்றியூர்), திருவள்ளூர் மத்திய மாவட்டம் செயலாளர் – கே.மணிகண்டன் (ஆவடி), சென்னை மத்தியம் (மேற்கு) மாவட்ட செயலாளர் – பழனி (அண்ணாநகர்),

ராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் – மன்மதன் (பரமக்குடி, முதுகுளத்தூர்), தர்மபுரி கிழக்கு மாவட்ட செயலாளர் – விஜயகாந்த் (ஆரூர், பாப்பிரெட்டிப்பட்டி) உள்பட 19 மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

சென்னை மாவட்ட செயலாளர்களில் ஒருவர் (திரு.வி.க.நகர் – பல்லவி) பெண் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னை தெற்கு (மேற்கு) மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சபரிநாதன், விஜய் கார் ஓட்டுனர் ராஜேந்திரனின் மகன் ஆவார்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்கள்: உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, மார்ச்.14

காலநிலை வீரர்கள் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 50 மின் ஆட்டோக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில், 'காலநிலை வீரர்கள்' திட்டத்தின் கீழ், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ரூ.4.83 லட்சம் மதிப்புள்ள 50 மின் ஆட்டோக்களை கடந்த 8ந்தேதி வழங்கினார். இந்த நிலையில், காலநிலை வீரர்கள் திட்டத்தின் கீழ் 2ம் கட்டமாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு, மின் ஆட்டோக்கள் வழங்கும் நிகழ்ச்சி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ரூ.4.83 லட்சம் மதிப்பிலான 50 மின் ஆட்டோக்களை, மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு உதயநிதி ஸ்டாலின் வழங்கி கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் இணையதளத்தின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான தீர்வுகளை வழங்கிடும் முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் புத்தொழில் நிறுவனங்கள் பதிவு செய்து, தங்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள தமிழ்நாடு புதுமை தொழில் முனைவோர் திட்டத்தின் இணைய முகப்பை அவர் தொடங்கி வைத்தார். தொடர்ந்து, கடலோர தமிழகத்திற்கான உயிர்க்கேடய வரைபடங்கள், பாரம்பரிய மீள் திறனுக்கான வேர்கள், பழங்குடியினரும், கால நிலை மாற்றமும், நிலையான வாழ்விடத்திற்கான சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்பிலான 3 புத்தகங்களையும் அவர் வெளியிட்டார். சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான பசுமை உள்கட்டமைப்புகளை முழுமையாக செயல்படுத்தி உள்ள திண்டுக்கல் என். பஞ்சம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, இடையக்கோட்டை நேருஜி அரசு மேல்நிலைப்பள்ளி, கரூர் புகளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருச்சி கஞ்சநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளை பாராட்டி, பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பசுமை பள்ளிகளுக்கான சான்றிதழ்களை வழங்கி கவுரவித்தார்.

நிகழ்ச்சிக்கு பிறகு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது:– மத்திய பா.ஜ.க. அரசு, தமிழகத்தையும், பெரியாரையும் இழிவுப்படுத்துவதை ஒரு கொள்கை முடிவாக எடுத்து செயல்பட்டு வருகிறது. தமிழர்களை நாகரிகமற்றவர்கள் என்று கூறியவர்களுக்கு, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், சரியான பதிலலை தமிழக மக்கள் அளித்து வருகிறார்கள். அமலாக்கத்துறை சோதனையை திசை திருப்ப மத்திய மந்திரியின் மீது குற்றம்சாட்டுவதாக அண்ணாமலை தெரிவித்திருக்கிறார். கல்விநிதி தொடர்பான விவகாரம் 3 மாதங்களாக நடந்து வருகிறது. அமலாக்கத்துறை இப்போதுதான் சோதனை செய்கிறது. இந்த விவகாரத்தில், பா.ஜ.க.தான் திசை திருப்பும் முயற்சியில் ஈடுபடுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் தங்கம் தென்னரசு, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியா சாகு, ஊரக வளர்ச்சி மன்ற கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, காலநிலை மாற்றத்துறை இயக்குனர் ராகுல்நாத், மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குனர் ஸ்ரேயா சிங் உள்பட பலர்பங்கேற்றனர்.

கடலூரில் உலக சிறுநீரக தின விழிப்புணர்வு பேரணி: கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்

கடலூர், மார்ச்.14

கடலூரில் உலக சிறுநீரக தின விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்.

உடல்நலத்தில் சிறுநீரகங்களின் பங்கு குறித்தும், சிறுநீரக நோய்கள் வராமல் தடுக்கும் முறைகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் உலக சிறுநீரக தினம் மார்ச் மாதம் 2வது வியாழன் அன்று கடைபிடிக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு உலக சிறுநீரக தினத்தினை முன்னிட்டு கடலூரில் நேற்று விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கடலூர் அரசு தலைமை மருத்துவமனையின் கண்காணிப்பாளர் அசோக் பாஸ்கர் தலைமை தாங்கினார். அரசு மருத்துவமனை நிலைய மருத்துவர் கவிதா, முதலமைச்சர் காப்பீடு திட்ட பற்று அலுவலர் பிரேமா, சிறுநீரக பிரிவு தலைமை மருத்துவர் திருமுருகன், செவிலியர் கண்காணிப்பாளர்கள் அனுசியா, பிரேமலதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கலந்துகொண்டு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதையடுத்து கடலூர் டவுன்ஹால் முன்பு இருந்து தொடங்கிய பேரணியானது பாரதி சாலை வழியாக கடலூர் அரசு மருத்துவமனை வரை சென்றது.

பேரணியில் செவிலிய பயிற்சி பள்ளி மாணவிகள் பலர் கலந்துகொண்டு சிறுநீரகம் பாதுகாப்பு குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி சென்று பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் அரசு மருத்துவமனை சிறுநீரக பிரிவு செவிலியர்கள் பானுமதி, லதா மற்றும் செவிலியர் பயிற்சி பள்ளி முதல்வர், ஆசிரியர்கள், பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

Chola Enter a better life

கார்ப்பரேட் அலுவலகம் : சோழா கிரெஸ்ட், சூப்பர் பி, சி54 & சி55, 4 திருவிக இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.

மின்–ஏல விற்பனை அறிவிப்பு (மின்–ஏலம் மூலம் மட்டுமே விற்பனை)

கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 8 மற்றும் 9ன் கீழ் ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை அறிவிப்பு

காலம் (ஏ)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரார்களுக்கும் மற்றும் உத்தரவாதாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஈடுபெற்ற கடன்தாரரிடம் காலம் (சி)ல் விவரிக்கப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்டுள்ள /சார்ஜ் செய்யப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் காலம் (டி)யில் விவரிக்கப்பட்டுள்ளபடி ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலமாக ஆக்கப்பூர்வமான உடைமையாக்கப்பட்டுள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி, "எங்கே எப்படி இருக்கிறதோ, அப்படியே", "உள்ளது போல்" & "எப்படி இருந்தாலும்" விற்கப்படும்:

கடன்தாரர்/அடமானம்தாரர் (கள்)/ சட்டப்பூர்வ வாரிசு, சட்டப் பிரதிநிதிகள் (தெரிந்தவர் அல்லது தெரியாதவர்), நிறைவேற்றுபவர் (கள்), நிர்வாகி (கள்), வாரிசு (கள்) மற்றும் அந்தந்த கடன்தாரர்கள் (கள்)/ அடமானதாரர்(கள்) (இறந்ததிலிருந்து) ஆகியோரின் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 9(1)ன் கீழ் காலம் (ஏ)ல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஈடுபெற்ற கடன்தாரரான சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும், அதாவது **https://www.cholamandalam.com & www.auctionfocus.in**

வ எ ண்	(ஏ) கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) பெயர்கள்	(பி) மீட்க வேண்டிய பாக்கி (ஓ/எஸ்) (ஈடுபெற்ற ஆஸ்திகள்)	(சி) அசையா சொத்து/ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம்	(டி) சுவாதீன வகை	(இ & எப்) குறைந்தபட்ச விலை (ரூபாயில்) முன்வைப்புத் தொகை (ரூ.)	(ஜி) ஏலத்தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு. எண்(கள்). : HL10TMB000052757 **1. திரு/திருமதி கார்த்திகேயன் ராஜ்மோகன் 2. திரு/திருமதி கார்த்திகேயன் கல்பனா** இருவரது வசிப்பிடம்: 3/187, கால்நடை மருத்துவமனை தெரு, கடம்பத்தூர், திருவள்ளூர், BDO அலுவலகம், திருவள்ளூர் – 631 203, தமிழ்நாடு; மேலும்: ச.எண். 284/24, 284/24பி / எஸ்.எண். 284/24, 284/24பி, யேசுநாதர் கோயில் தெரு, (சர்ச் தெரு), தத்தனூர் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் – 602 105 தமிழ்நாடு.	**12.03.2025 தேதியின்படி ரூ.22,90,215/– (ரூபாய் இருபத்திரெண்டு லட்சத்து தொன்னூறாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்)**	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண். 284/24 மொத்த நிலத்தின் பரப்பளவு & அதில் கட்டப்பட வேண்டிய கட்டிடம். நிலம் மற்றும் கட்டிடம், ஏக்கர் 0.10 சென்ட் (அதாவது 4360 சதுர அடி). இந்த சொத்தானது காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, தத்தனூர் கிராமத்தில் அமைந்துள்ளது. * எல்லைகள் * வடக்கு: சர்வே எண். 284/24–ல் உள்ள நிலம்; * தெற்கு : சிமெண்ட் சாலை (யேசுநாதர் கோவில் தெரு); * கிழக்கு : 3 அடி பொதுப் பாதை & திரு. மெஜாக்கிற்குச் சொந்தமான நிலம்; * மேற்கு : திரு. குணாவுக்குச் சொந்தமான வீடு.	**ஆக்கப்பூர்வ சுவாதீனம்**	**ரூ.58,72,500/– (ரூபாய் ஐம்பத்தெட்டு லட்சத்து எழுபத்திரெண் டாயிரத்து ஐநூறு மட்டும்) ரூ.5,87,250/– (ரூபாய் ஐந்து லட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூற்று ஐம்பது மட்டும்)**	**29.03.2025 அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)**
2	கடன் கணக்கு. எண்(கள்). : **HL03NUG000036338** **1. திரு. / திருமதி. சீனிவாசன் ஓம்பிரகாஷ் 2. திரு/திருமதி. வசந்தா சீனிவாசன், வசிப்பிடம் : எண்.11, கடப்பா டிரங்க் சாலை, திருத்தணி, திருவள்ளூர், திருத்தணி 631 209; மேலும்: சர்வே எண். 53/2, 75/2A, 75/2ம, 75/2C1, 75/2C2, 75/3 & 75/1, மனை எண். 1 முதல் 33, எப்.எண் 15E, 2வது தளம் , பிளாக் எண். 15, ஆண்டனி ட்ரெமைன் ஆப்ட்ஸ், கரணைபுதுச்சேரி, சென்னை, என்.பி.ஆர். கல்யாண மண்டபம், செங்கல்பட்டு 603 202.**	**12.03.2025 தேதியின்படி ரூ.34,13,894/– (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து பதிமூன்றாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று நான்கு மட்டும்)**	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, காரணைபுதுச்சேரி கிராமத்தில் அமைந்துள்ள 80,224 சதுர அடி (184 சென்ட்) காலி நிலம் அயிட்டம் எண். 1, 2, 3 & 4ல் விரிவாக கூறப்பட்டுள்ளது. **அயிட்டம் எண்.** 1 மொத்த விஸ்தீரணம் 63 சென்ட். சர்வே எண். எஸ். எண். 53/2. எல்லைகள் : வடக்கில் சர்வே எண். 53/1 இல் உள்ள நிலம், தெற்கில் சர்வே எண். 75/1 இல் உள்ள நிலம் (அயிட்டம் 4), கிழக்கில் சர்வே எண். 76இல் உள்ள நிலம், மேற்கில் சர்வே எண். 54 & 55இல் உள்ள நிலம் **அயிட்டம் எண்.2** மொத்த விஸ்தீரணம் 36 சென்ட். சர்வே எண். 75/20. எல்லைகள் : வடக்கில் சர்வே எண். 75/2BBஇல் உள்ள நிலம், தெற்கில் சர்வே எண். 75/28இல் உள்ள நிலம், கிழக்கில் சர்வே எண். 75/2 & 75/3இல் உள்ள நிலம் (சர்வே எண். 74ல் உள்ள மேற்குப் பக்க நிலம் **அயிட்டம் எண்.3** மொத்த விஸ்தீரணம் சர்வே எண். 75/2Bஇல் உள்ள 15 சென்ட், சர்வே எண். 75/2C1இல் உள்ள 15 சென்ட், சர்வே எண். 75/202இல் உள்ள 4 சென்ட். எல்லைகள் : வடக்கு: சர்வே எண். 75/3 இல் உள்ள நிலம் **(அயிட்டம் 4)**, தெற்கு: சர்வே எண். 75/2C2 இல் உள்ள நிலம் (பகுதி), கிழக்கு: சர்வே எண். 76 இல் உள்ள நிலம், மேற்கு: சர்வே எண். 75/24 இல் உள்ள நிலம் **(அயிட்டம் 2), அயிட்டம் 4** சர்வே எண். 75/3இல் உள்ள 19 சென்டா மற்றும் சர்வே எண். 75/1இல் 17 சென்ட் விஸ்தீரணம் கொண்ட நிலம். எல்லைகள் : வடக்கு: சர்வே எண். 53/2இல் உள்ள நிலம் **(அயிட்டம் I)**, தெற்கு: சர்வே எண். 75/2Bஇல் உள்ள நிலம் **(அயிட்டம் 3)**, கிழக்கு: சர்வே எண். 76இல் உள்ள நிலம், மேற்கு: சர்வே எண். 75/2Aஇல் உள்ள நிலம் **(அயிட்டம் 2)**. இந்த சொத்தானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை பி : சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்கள் 1 முதல் 33 வரை உள்ள காலி நிலம் மற்றும் 2010'' அகல தனியார் சாலை 18.02.2012 தேதியிட்ட துணைப் பிரிவு ஒப்புதல் எண்கள் 24/2012, 25/2012, 26/2012, 27/2012, 28/2012, 29/2012, 30/2012, 31/2012, 32/2012, 33/2012, 35/2012ன் படி மொத்த விஸ்தீரணம் 76,054 சதுர அடி, சர்வே எண். 53/2, 75/24, 75/28, 75/201, 75/202. 75/3 & 75/1 காரணைபுதுச்சேரி கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மேலே விவரிக்கப்பட்ட **அட்டவணை** "A" சொத்து உள்ளது. **அட்டவணை** "C" (இந்த ஆவணத்தின் கீழ் சொத்து உள்ளது) அடுக்குமாடி குடியிருப்பு பிளாட் எண்.15E, இரண்டாவது தளம், பிளாக் எண். 15, ஆண்டனி டிரெமைன் அப்பார்ட்மெண்ட்ஸ், காரணைபுதுச்சேரி கிராமம், பில்டப் ஏரியா 912.8 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது, இதில் பொதுவான பகுதி மற்றும் கட்டிடத்தில் 1 கார் பார்க்கிங் பகுதி ஆகியவை அடங்கும். பிரிவுபடாத பங்கு நிலம் மொத்த நிலம் 76,054 சதுர அடியில் உள்ள 597 சதுர அடி. மேலே உள்ள **அட்டவணை** Bஇல் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளது. இந்த சொத்து தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரியின் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.	**ஆக்கப்பூர்வ சுவாதீனம்**	**ரூ.31,19,040/– (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து பத்தொன்ப தாயிரத்து நாற்பது மட்டும்) ரூ.3,11,904/– (ரூபாய் மூன்று லட்சத்து பதினோராயிரத்து தொள்ளாயிரத்து நான்கு மட்டும்)**	**29.03.2025 அன்று மதியம் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (டெண்டர் படிவ விதிகளின்படி ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் தானியங்கி நீட்டிப்புகள்)**

*** ஆய்வு தேதி & நேரம் : 27.03.2025 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** | *** குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை : ரூ. 10,000/–**

***ஏலம் / இஎம்டி / கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தலுக்கான கடைசி தேதி : 28.03.2025 அன்று மாலை 5.00 மணிவரை**

*** பணம் செலுத்தும் தேதி வரை மற்றும் / அல்லது அது திரும்பப் பெறும் காலம் வரை கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொருந்தக்கூடிய கூடுதல் வட்டி, தற்செயலான செலவுகள், செலவுகள், கட்டணங்கள் முதலியன.**

சொத்தை ஆய்வு செய்வது தொடர்பான எந்த உதவிக்கும், அல்லது ஏல ஆவணத்தைப் பெறுவதற்கும் மற்றும் வேறு ஏதேனும் கேள்விகளுக்கும், **திரு. முரளி அவர்களை அவரது மொபைல் எண். 8939998886 & மின்னஞ்சல்:** muralimr@chola.murugappa.com/**திரு. முகமது அப்துல் குவாய், சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனியின் அதிகாரி, மொபைல் எண்.** 7305990872 அவர்களை அணுகலாம். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு தெரிந்த வரையில் மேலே உள்ள அசையா சொத்துக்கள் / ஈடுபெற்ற சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

ஒப்பம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அன்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

தேதி : 13.03.2025
இடம்: காஞ்சிபுரம், தமிழ்நாடு

மாண்புமிகு XIX கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றம் முன்பாக,
சென்னை
O.S. No. 4208 OF 2024

ஐசிஐசிஐ வங்கி லிமிடெட் ...வாதி
எதிர்
விஜயகுமார் G ...பிரதிவாதி
பெறுநர்
விஜயகுமார் G
த/பெ. கணேசன், மனை எண்.48,
சர்வே எண்.74, எஸ்1, 2வது தளம்,
அசோக் நிரஞ்சன் நகர், 3வது தெரு,
காமராஜ் நகர், பருத்திப்பட்டு,
ஆவடி, சென்னை 600 071.
...பிரதிவாதி

ஐயா,

மேற்கண்ட வழக்கில், மாண்புமிகு XIX கூடுதல் சிட்டி சிவில் நீதிமன்றம், பத்திரிக்கை வெளியீடு மூலம் உங்களுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டு, 04.04.2025 அன்று வழக்கு விசாரணைக்கு வருகிறது என்பதை நினைவில் கொள்ளவும்.அன்றைய தினம் ஆஜராகி உங்கள் ஆட்சேபனையை நேரிலோ அல்லது உங்கள் வக்கீல் மூலமாகவோ தெரிவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அன்றைய தினம் நீங்கள் ஆஜராகத் தவறினால், நீங்கள் இல்லாத நிலையில் வழக்கு அதன் தகுதியின் அடிப்படையின் முடிவு செய்யப்படும்.

இப்படிக்கு
எஸ்.சி. விஸ்வநாத்
வாதியின் ஆலோசகர்

பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

BAJAJ FINANCE

பதிவு அலுவலகம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், C/o. பஜால் ஆட்டோ லிமிடெட் காம்ப்ளக்ஸ், மும்பை புனே சாலை, அகுர்டி, புனே 411 035.
கிளை அலுவலகம்: பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம் சாய் ராஜ் 14 ஆபீசர்ஸ் லேன், வேலூர் 632001, தமிழ்நாடு

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)

(2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க விதிகள், 8(1)வது விதிமுறை மற்றும் பிற்சேர்க்கை IVன் கீழ்)

கீழே கையொப்பமிட்டுள்ள பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டின் (பிஎப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/ஆகியோருக்கு **பதிவுத் தபால் மூலம் (''அறிவிப்பு'')** அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்கண்ட சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்(கள்)/உடன்கடன்தாரர்(கள்)/உத்தரவாததாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைக்கு இணங்கவும் அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சட்டத்தின் 13வது பிரிவின் துணைப் பிரிவு (8)ன் கீழ் ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்காக, போதிய கால அவகாசம் உள்ளதால் அதை மீட்டுக்கொள்ள கடன்தாரர்கள் மற்றும் உடன் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண்./ கடன்தாரர்(கள்)/அடமானதாரர்கள் /உத்தரவாததாரர்கள் பெயர்	ஈடுபெற்ற ஆஸ்தியின் விவரம் (அசையா சொத்து)	பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு தேதி மற்றும் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு தொகை மற்றும் சுவாதீனத் தேதி
LAN : P462PBL5759864 கிளை: வேலூர் **1. திரு. கோட்டி ஆர், த/பெ. வி. ரவி** முகவரி : எண்.115 பி, பெரியார் நகர், பலவன்சாத்து, வேலூர், தமிழ்நாடு 632002. தொடர்பு எண். 7200636353 மின்னஞ்சல் முகவரி: koti@gmail.com மேலும் : ச.எண்.79 ஏ/3, மனை எண்.19 பகுதி, பலவன்சாத்து கிராமம், வேலூர் தாலுகா, வேலூர் சார் பதிவு அலுவலகம், வேலூர் பதிவு மாவட்டம், வேலூர் மாவட்டம் தமிழ்நாடு 632002 **2. திருமதி ஜெயநதி ஆர், க/பெ. ரவி, த/பெ நடேசன் முகவரி** : எண்.115 பி, பெரியார் நகர், பலவன்சாத்து, வேலூர், தமிழ்நாடு 632002. தொடர்பு எண். 7200636353 மின்னஞ்சல் முகவரி: koti@gmail.com	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். எஸ்.எப்.எண்.79 A/3, மனை எண்.19 பகுதி, பலவன்சாத்து கிராமம், வேலூர் தாலுகா, வேலூர் சார் பதிவு அலுவலகம், வேலூர் பதிவு மாவட்டம், வேலூர் மாவட்டம், தமிழ்நாடு 632002. பொதுப் பகுதியில் விகிதாசார பங்குடன் (விஸ்தீரணம் 1520 சதுர அடி) எல்லைகள்: கடன் ஆவணங்களின்படி: கிழக்கில்: வீடு; மேற்கில்: 16 அடி சாலை; வடக்கில்: வீடு; தெற்கில்: வீடு. சொத்து ஆவணங்களின்படி: கிழக்கில்: வி.சி. நயன கண்ணு சொத்து; மேற்கில்: தெரு; வடக்கில்: மனை எண். 20, காலி மனை, தெற்கில்: பாலகிருஷ்ணன் சொத்து	10.12.2024 & ரூ.29,09,893/- **சுவாதீனத் தேதி : 11 மார்ச் 2025**

தேதி: 13.03.2025, இடம்: வேலூர்
ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்

புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்

Protium

(முன்னர் குரோத் சோர்ஸ் பைனான்ஷியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு அலுவலகம்: நிர்லான் நாலெட்ஜ் பார்க் (NKP) ம–2, ஏழாவது தளம், பஹாடி கிராமம், ஆப். மேற்கு விரைவு நெடுஞ்சாலை, காமா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கி), மும்பை, மகாராஷ்டிரா 400063

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8 (6)ன் கீழ் அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன என்று பொது மக்களுக்கும் பொதுவாகவும், கடன்தாரர் / உடன் கடன்தாரர் / அடமானதாரருக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. அந்த சொத்து புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கப்பூர்வ சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது (இனிமேல் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் என குறிப்பிடப்படும்). ஈடுபெற்ற சொத்துக்கள் மின்னணு ஏலத்தின் மூலம் "எங்கே உள்ளதோ அங்கேயே", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "எந்த மாற்றமில்லாமல்" என்ற அடிப்படையில் விற்கப்படும். http://bankauctions.in/ என்ற இணையதளம் மூலம் பொது மின்னணு ஏலத்தை நடத்த உள்ளோம் என்று இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

1.கணக்கு எண் 2.கடன்தாரர், உடன் கடன்தாரர் 3. அடமானதாரர் பெயர்	4. கோரிக்கை அறிவிப்பு தேதி 5. 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை 6. அடையாள சுவாதீனத் தேதி 7. அன்றைய தேதியிலான தொகை	8. சொத்து/சொத்துகள் குறித்த விவரம்	9. ரிசர்வ் விலை 10.டேவணித் தொகை டெபாசிட் 11. ஏல அதிகரிப்பு தொகை (ரூபாயில்)	12. மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், 13. EMDஐ சமர்ப்பிக்க கடைசித் தேதி 14. ஆய்வுத் தேதி
1.GS028EEL1913137, 2.(a) **மாறன் மல்டி கூசின் ரெஸ்டாரண்ட் சார்பாக அதன் உரிமையாளர் ரஞ்சித் குமார்,** (b) **ரஞ்சித் குமார்,** (c) **சின்னதம்பி தாக்ஷாயினி,** (d) **அருண்குமார்** அனைவரது முகவரி : 5/6/7, பெங்களூர் - சென்னை நெடுஞ்சாலை சாலை, ராணிப்பேட்டை, வேலூர் 632401 மேலும், டி.எஸ். எண். 43 பகுதி, டி.எஸ். எண். 146/1, A வார்டு, பிளாக் எண். 19, அப்பை தெரு, கதவு எண். (பழையது) – 18, கதவு எண். (புதியது) – 12, ஆற்காடு தாலுகா, வேலூர் 632 503 மேலும், எண். 12/18, அபய் தெரு, ஆற்காடு, வேலூர் 632503, தமிழ்நாடுநாடு	4. தேதி: 05 அக்டோபர் 2024, 5. அக்டோபர் 03, 2024 அன்று ரூ.3412441.98/- (ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்று நாற்பத்தொன்று மற்றும் தொன்னூற்று எட்டு பைசா மட்டும்) மற்றும் அக்டோபர் 03, 2024 முதல் 18% கூடுதல் வட்டியுடன் எங்கள் அறிவிப்பில் கோரப்பட்டுள்ளபடி முழுத் தொகையும் பிற கட்டணங்களுடன் செலுத்தும் வரை, இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்கள் சட்டப்பூர்வ காலத்திற்குள், 6. 28 டிசம்பர் 2024, 7. மார்ச் 10, 2025 அன்று ரூ.3656537.29/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூற்று முப்பத்தியேழு மற்றும் இருபத்தொன்பது பைசா மட்டும்)	a). அசையா சொத்துகள்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், நிலம் மற்றும் கட்டிடம். இந்த சொத்தானது புதிய கதவு எண். 12, பழைய கதவு எண். 18/2, நகராட்சி மதிப்பீட்டு எண். 025/017/00666ல் உள்ளது. அதன் விஸ்தீரணம் 1555 1/2 சதுர அடி, அப்பை தெரு, வார்டு A, தொகுதி எண். 19, ஆற்காடு டவுன், ஆற்காடு தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். பழைய சர்வே எண். 146/1ல் உள்ள 1555 1/2 சதுர அடி நிலம், TSLRன்படி பழைய டவுன் சர்வே எண். 43 பகுதி மற்றும் புதிய டவுன் சர்வே எண். 43/5, ராணிப்பேட்டை சார் பதிவு மாவட்டம், ஆற்காடு பதிவு மாவட்டம் ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ளது. அதன் எல்லைகள் : கிழக்கே: தசரதன் வீடு, மேற்கு: கணேச செட்டியார் சந்து மற்றும் அர்ஜுனம் மற்றும் ராஜேந்திரன் சொத்து, வடக்கு: கணேச செட்டியார் சொத்து, தெற்கே: அப்பை தெரு மற்றும் அர்ஜுனம் மற்றும் ராஜேந்திரன் சொத்து. விஸ்தீரணம் அயிட்டம் 1 : வடக்குப் பக்கத்தில் 3 1/2 அடி, தெற்குப் பக்கத்தில் 3 1/2 அடி, கிழக்குப் பக்கத்தில் 37 அடி, மேற்குப் பக்கத்தில் 37 அடி, மொத்த விஸ்தீரணம் : 129 1/2 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். விஸ்தீரணம் அயிட்டம் 2 : வடக்குப் பக்கத்தில் 8 அடி, தெற்குப் பக்கத்தில் 8 அடி, கிழக்குப் பக்கத்தில் 32 அடி, மேற்குப் பக்கத்தில் 32 அடி, மொத்த விஸ்தீரணம் 256 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். விஸ்தீரணம் அயிட்டம் 3 : வடக்குப் பக்கத்தில் 36 அடி, தெற்குப் பக்கத்தில் 36 அடி, கிழக்குப் பக்கத்தில் 33 அடி, மேற்குப் பக்கத்தில் 32 அடி, 1170 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம். மொத்தம் 129 1/2 + 256 + 1170 = 1555 1/2 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம்.	9. ரூ.37,00,000/- (ரூபாய் முப்பத்தேழு லட்சம் மட்டும்) 10. ரூ.3,70,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபதாயிரம். மட்டும்) 11. (ஏல அதிகரிப்பு மதிப்பு: ரூ.5,000/-)	**12. 12 ஏப்ரல் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை (ஒவ்வொன்றும் 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்) 13. 11 ஏப்ரல் 2025 அன்று மாலை 5:00 மணி வரை. 14. 26 மார்ச் 2025 அன்று காலை 11:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை**

1. ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் https://bankauctions.in & https://protium.co.in/ என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
மேலும் விவரங்கள், உதவி, நடைமுறை மற்றும் மின்னணு ஏலம் குறித்த ஆன்லைன் பயிற்சிக்கு, வருங்கால ஏலதாரர்கள் திரு. நிதேஷ் டி பவார் அவர்களை தொலைபேசி எண். 8142000725/ 8142000066.email id: nitesh@bankauctions.in / info@bankauctions.in-ல் தொடர்பு கொள்ளலாம்.
• விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, மின்னணு ஏலத்தில் பங்கேற்க https://bankauctions.in மற்றும் https://protium.co.in/ ஐப் பார்க்கவும்.
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்க) விதிகள், 2002ன் விதி 8(6)/ விதி 9 (1)ன் கீழ் இது ஒரு சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பு ஆகும்,

தேதி : 14.03.2025
இடம் : ராணிப்பேட்டை, வேலூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
புரோடியம் ஃபைனான்ஸ் லிமிடெட்